
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :29 January 2026*

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan**

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# தமிழ்

# புலவர் பெயர் தெரியாத நற்றிணைப் பாடல்களில் ஆளுமைத் திறம்

## *Personalities of unknown poets in nattrinai poem*

***முனைவர் இரா.ஜெய்சங்கர், தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர்(CDOE),*** *பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா. ORCID : https://orcid.org/0000-0002-2959-6384*

***Dr.R.Jaisankar,*** *Associate Professor in Tamil (CDOE), Bharathidasan University, Thiruchirappalli, Tamil Nadu,India.ORCID : https://orcid.org/0000-0002-2959-6384*

***Abstract***

*In Sangam Literature, Nattrinai is one of the collection of Poems. In Nattrinai totally 400 poems are there but 54 poems poet names are unknown. This articles explored the personality of the poets(54 poems) in two Stages, namely the purpose of the poets the knowing the personality and their methed of knowing the personality. The personality traits of the poets have been compared with the opinions of Scholars about their personality. It can be seen that the poets have adapted the general tradition of Sangam literature by adopting the techniques of illustration, metaphor, intonation to express the idea of the song. Comparing the personality traits of the Nattrinai poets Anonymous with the views of scholars on personality, the majority found that their personality traits matched with the views of the scholars.*

***Keyword:*** *Sangam literature, Nattrinai, personality, purpose, traits of poets.*

**ஆய்வுச்சுருக்கம்**

புலவர் பெயர் தெரியாத நற்றிணைப் பாடல்கள் (மொத்தம் : 54) வழி அப்பாடல்களை இயற்றிய புலவர்களின் ஆளுமைத்திறம் இவ்வாய்வுக்கட்டுரையில் இனம் காணப்பட்டுள்ளது. மேலும் புலவர்களின் நோக்கம் வழி ஆளுமை அறிதல், உத்திமுறை வழி ஆளுமை அறிதல் என்ற இரண்டு நிலைகளில் புலவர்களின் ஆளுமைத்திறம் ஆராயப்பெற்றுள்ளது. ஆளுமை பற்றிய அறிஞர்களின் கருத்துக்களுடன் பெயர் தெரியாத நற்றிணைப் பாடல்களிy; புலவர்களின் ஆளுமைப்பண்பு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. புலவர்கள், பாடலின் கருத்து வெளிப்பாட்டிற்கு உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி ஆகிய உத்திமுறைகளை புலவர்கள் பெரிதும் கையாண்டுள்ளத்தன் வாயிலாக இப்புலவர்கள் சங்க இலக்கியப் பொது மரபை தழுவி பாடல் இயற்றியிருப்பது சுட்டிக்காட்டப்பெற்றுள்ளது.ஆளுமை பற்றிய அறிஞர்களின் கருத்துக்களுடன், நற்றிணை பெயர் தெரியாத புலவர்களின் ஆளுமைப் பண்பை ஒப்பிட்டு

ஆராயும்போது பெரும்பான்மையும் அறிஞர்களின் கருத்துக்களுடன் அவர்களின் ஆளுமைப் பண்புகள் பொருந்தி வருவது விவரிக்கப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** சங்க இலக்கியம், நற்றிணை,ஆளுமைத் திறம், நோக்கம், புலவர் பண்புக் கூறுகள்.

**முன்னுரை**

சங்க இலக்கியம் நமது முன்னோர்களின் சிந்தனைகளை அறிய உதவும் ஆவணம். சங்ககாலப் புலவர் பெருமக்கள் பல்வேறு சிறப்புகளையும், தகுதிகளையும் கொண்டவர்கள். அவர்கள் தங்களது திறமைகளை (அ) படைப்பாற்றலைப் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்தியுள்ளனர். புலவர் பெயர் தெரியாத நற்றிணைப் பாடல்கள் வழி அப்பாடல்களை இயற்றிய புலவர்களின் ஆளுமைத் திறத்தை வெளிப்படுத்தும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது. மேலும் புலவர் பெயர் தெரியாத நற்றிணைப் பாடல்களின் (54) புலவர்கள் களவு கற்பாக விரைவில் மாற வேண்டும், நொது மலர் வரைவு, உடன்போக்கு இவற்றில் இடர்பாடுகள் வரும் போது அவற்றை உள்ளார்ந்த மனவலிமையுடன் எதிர்த்து அறத்தோடு நிற்க வேண்டும் என்பதனை வலுயுறுத்துவதிலும் பொருள், இளமை இவற்றின் இன்றியமையாமையைத் தெளிவுப்படுத்துவதிலும் புலவர்களின் நோக்கம் வழியான ஆளுமை இக்கட்டுரையில் விவரிக்கப்படவுள்ளன.

**ஆளுமை - விளக்கம்**

ஆளுமை என்பது ஆயிரக்கணக்கான ,iாகளால் சமுதாயத்துடன் பிணைக்கப்பட்ட ஒன்றாகும். அறிஞர் பெருமக்களிடையே ஆளுமை பற்றி மாறுபட்ட கருத்து நிலவுகின்றது. ஒருவனது குடும்பம், அவன் வாழும் சூழ்நிலை, பாரம்பரியம் இயல்பாக அமையும் உள்ளக் கிளர்ச்சி ஆகியவை ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடன் உருவாகுவது ஆளுமைத்திறம் என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகின்றது. வின்சுலோவின் ஆங்கில — தமிழ் அகராதி ஆளுமை பற்றி விவரிக்கும்போது, **“தனி மனிதரிடம் உள்ள வேறுபட்ட செயற்பண்பு நிலைகளில் ஒன்று”** எனக் கூறுகின்றது. **ஒரு கலைஞனின் (அ) கவிஞனின் முன்னேற்றம் என்பது தொடர்ச்சியான தியாகத்தையும், அதனோடு தன் ஆளுமையை முற்றாகச் சரண் ஆக்குதலையும் பொறுத்து அமையக் கூடியது (இலக்கிய மரபும் தனித்திறமையும், ப.44).**“**ஒரு மனிதனின் உலகக் கண்ணோட்டம் அல்லது உலகளாவிய பார்வைதான், ஆளுமையின் மைய உட்கருவாக விளங்குகின்றது. அவற்றில்தான் மனிதனின் கோட்பாடுகளும், இலட்சியங்களும் வாழ்க்கை நோக்கங்களும் உருக்கொண்டு, அவனுடைய சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றின்**

**ஒருங்கிணைந்த ஆளுமை வெளிப்படுகின்றது. மேலும், ஆளுமையின் பிரத்தியேகமான செயற்பாடுகள் தான்"(கவிதையேனும் மொழி,ப.128 )**

**"ஆளுமை என்றால் நன்றாகவும் அழகாகவும் திடமிக்கவராகவும் இயல்பு, நேர்மை, நட்புணர்வு, அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியணர்வு, தந்திரம் போன்ற பண்புகளைக் கொண்ட இயல்பும் நடத்தையும் சேர்ந்த மொத்த கலவை" (பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி,ப.28).**

மேற்காணும் சிந்தனைகளை உள்வாங்கிக்கொண்டு தனியொரு பாடலின் வழி புலவரின் ஆளுமையை அறிவது, புலவர் பெயர் தெரியாத நிலையில் சாத்தியமில்லை. எனவே அவர்களின் ஒட்டுமொத்தப் பாடல்கள் வழி புலவர்களுடைய ஆளுமைப் பண்பை வெளிப்படுத்த முனைகிறது இவ்வாய்வுக் கட்டுரை. நற். *9, 10, 22, 45, 46, 84, 92, 107, 108, 111, 115, 125, 126, 132, 134, 160* முதல் *186* வரை *188, 189, 190, 192, 193, 195, 201, 207, 235, 271, 355, 396,* ஆகிய *54* பாடல்கள் இங்கு ஆய்வுக்குரியனவாக அமைகின்றன.

**புலவர்களின் நோக்கம் வழி ஆளுமை அறிதல்**

புலவர்கள், தலைவியின் நலனழிவு கூறியும், (நற். *108, 168, 173, 188*) தலைவன் வரும் வழியின் கொடுமை கூறியும் (நற்.*178, 195*), தலைவனின் பண்புநலன், உறுதிமொழி கூறியும் (நற்.*178, 195*), ஊரின் அலர் கூறியும் (நற்.*175*) தலைவன் களவு வாழ்வை நீட்டிக்காமல் விரைவில் திருமணம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு பாடல் யாத்துள்ளத்தை காணமுடிகிறது. சான்றாக; நற்.**168**-ஆம் பாடலின், களவின்பத்தை நாடும் தலைவனிடம் தலைவியானவள் பசலை நோயாள் துன்பப்படுவதை உள்ளுறை உத்தி வாயிலாக புலவர் வெளிப்படுத்தி, தலைவியை விரைவில் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதை தோழி கூற்றாகப் புலவர் வெளிப்படுதிருப்பதைக் காணமுடிகிறது.

*“ புன்தலை மந்தி வன்பறழ் நக்கும்*

*நன்மலை நாட பண்பெனப் படுமோ” (நற்.168, ப. 211 )*

**பாடலின்**

| வெளிப்படையான பொருள் | உள்ளுறைந்துள்ள பொருள் |
|---|---|
| ↓ | ↓ |
| வேங்கை மரம் | தலைவி |
| ↓ | ↓ |
| ↓ | ↓ |
| மலர் பூத்து இருத்தல் | தலைவியின் பருவ மலர்ச்சி |
| ↓ | ↓ |
| வேங்கை மரத்தில் தேனிறால் | |
| ↓ | ↓ |
| தலைவிடத்துள்ள இன்பம் | |
| ↓ | ↓ |
| புள் மொய்த்தல் | தோழியர் சூழ்ந்திருத்தல் |
| கசிந்து வீழ்ந்த தேனைக்குறவர் உண்ணுதல் | தலைவியைப் பசலை உண்ணுதல் |
| எஞ்சியதை மந்தி உண்ணுதல் | தலைவன் தலைவியை களவிர் கூடுதல் |

**ஆற்றாமையை வெளிப்படுத்துதல்**

சங்க காலக் காதல் வாழ்வு இயற்கையோடு இயைந்த தூய்மையான ஒன்று என்றலும், அது பல்வேறு இடர்பாடுகளையும் ஏமாற்றங்களையும், எதிர்ப்பார்ப்புகளையும் பாடுபொருளாகக் கொண்டது. இந்நிலையை நற்.84,107, 160, 162, 167, 170, 174, 177, 178,

180, 184, 185, 186, 190, 193, 271 ஆகியப் பாடல்கள் வழி புலவர்கள், தலைவி, தலைவன், தோழி, தாய் என நால்வரின் ஆற்றாமையை வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

**தலைவி தன்னுடைய ஆற்றாமையை வெளிப்படுத்தல் மூன்று நிலைகளில் அமைகின்றது.**

1. தலைவி ஆற்றாமையை தோழியிடம் வெளிப்படுத்தல்
2. தலைவி ஆற்றாமையை தன்நெஞ்சிடம் வெளிப்படுத்தல்
3. தலைவி ஆற்றாமையை வாடைக்காற்றிடம் வெளிப்படுத்தல்

தலைவன் தலைவியைச் சந்திக்க இயலாத சூழ்நிலையிலும் தோழி தலைவன் — தலைவிக்கு இடையே ஏற்பட்ட ஊடலை தீர்க்க முடியாத சூழ்நிலையிலும், உடன்போக்கு சென்ற மகளை நினைத்து தாய் ஆற்றாமையை வெளிப்படுத்தும் சூழலையிலும் புலவர்கள் உவமைகள், உள்ளுறை, இறைச்சி, குறிப்புப் பொருள் வாயிலாக ஆற்றாமையைச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளனர்.

**உவமை**

புலவர்கள் தங்கள் கருத்தை எளிமையாக விளக்குவதற்கு நற்.8, 160, 161, 166, 183, 188, 355 ஆகிய ஏழு பாடல்களில் உவமை உத்தி முறையைக் கையாண்டுள்ளனர். உவமையைக் கையாளும் போது தனித்தனியாகவும் அடுக்கிய முறையிலும் கையாண்டுள்ளனர். நற்.8, 160, 161, 166, 183, 188, 355 ஆகியப் பாடல்களை இயற்றிய புலவர்கள் உவமையுடன் உருகவத்தையும் கையாண்டுள்ளனர். அவ்வாறு கையாளும்போது உவமையை இரண்டு முறையும், உருவகத்தை ஒரு முறையும் கையாண்டிருப்பதைக் காணமுடிகிறது. தலைவியின் அழகு, இயற்கையின் எழில், தலைவன் செயல்பாடு, தலைவனின் நாட்டு வளம் ஆகியவற்றை வர்ணிப்பதற்கு உவமையை புலவர்கள் சிறப்பாக கையாண்டுள்ளனர்

**உள்ளுறை**

உள்ளுறை உவமம் என்பது, தான் கருதிய பொருளை உட்பொருளாக அமைத்து, வெளிப்படையாய் உவமையை மட்டும் கூறுவதாகும். அதாவது பாடலில் வெளிப்படையாக ஒரு பொருள் தோன்றவும் உட்பொருளாகப் பிரிதொன்று தோன்றுவதாகவும். இவை பொருளைத் தெளிவுபடுத்துவதற்கும் முடிவுற்ற இன்பத்தைத் தருவதற்கும் இலக்கியத்தில் இடம் பெறுகின்றது. மேலும் இவை அகத்திணைக்கு மட்டும் உரியது, தெய்வம் ஒழிந்த பிற கருப்பொருளை நிலைக்களனாகக் கொண்டு அமையும். உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என உள்ளுறை ஐந்து வகைப்படும்.

***“உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென***

***உள்ளுறுத்து உறைவதே உள்ளுறை உவமம்”(தொ.பொ.51,ப.63 )***

ஆய்வுக்குட்படுத்திய நற்றிணைப் பாடல்களில் பதின்மூன்று பாடல்களில் உள்ளுறை இடம் பெறுகின்றது (நற். 22, 84, 1o07, 108, 168, 171, 175, 176, 178, 180, 181, 195, 396). அக வாழ்க்கையில் ஏற்படும் உணர்வுகளை வெளிப்படையாக மற்றவர்களிடம் தெரிவிப்பது நாகரிகம் அன்று, எனவே தலைவன் தலைவியர்க்கிடையே தோன்றும் அக உணர்வுகளை வெளிப்பத்தும் போது உள்ளுறை உவமத்தைச் சிறப்பாகப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளர்கள். சான்றாக ;

***“கண்ணுந் தோளுந் தண்ணுறுங் கதுப்பும்***

***திதலை அல்குலும் பலபாராட்டி “ (நற். 84,ப. 105)***

இப்பாடலில் தண்ணீர்த் தாகம் கொண்ட மான், சுடுகின்ற பாலைவனத்தில் காணப்படும் கானல் நீரை உண்மையான நீர் எனக் கருதி ஏமாற்றம் அடைவது போலத் தலைவனின் பொய் வார்த்தைகளை உண்மையானவை என நம்பி, தலைவி ஏமாந்துவிட்டாள் என்ற செய்தியை உள்ளுறை உவமையாகப் புலவர் கூறியுள்ளார். அதாவது மான் கானல் நீரைக் கண்டு ஏமாறுதல் என்பது புலவர் பாடலில் வெளிப்படையாக அமையும் கருத்து. தலைவி தலைவனின் பொய் வார்த்தைகளை உண்மையானவை என நம்பி ஏமாந்துவிட்டாள் என்பது பாடலின் உட்பொருளாய் அமையும் கருத்தாகும்.

**இறைச்சி**

**“இறைச்சி தானே உரிப்புறத்ததுவே” (தொ.பொருள் : 225, ப.233 )**

என்று இறைச்சியின் இலக்கணத்தைத் தொல்காப்பியர் கூறுகிறார். இதற்கு இளம்பூரணர், இறைச்சிப் பொருள் என்பது உரிப் பொருளுக்குப் புறத்தே தோன்றும் பொருள் என்று உரை எழுதியுள்ளார். பொதுவாக இறைச்சி என்பது முதலில் கருப் பொருளையும் பின்னர் அதன் கருத்துப் பொருளையும் அதன் பின்னர் அக்கருத்துப் பொருளால் பெறப்படும் குறிப்புப் பொருளையும் குறிக்கும் என்று கொள்ளப்படுகிறது.

இறைச்சி = (கருப்பொருள் → அதன் கருத்து → அதனால் பெறப்படும் குறிப்புப் பொருள்)

ஆய்விற்கு எடுத்துக் கொண்டப் பாடல்களில் நற். 111, 115, 125, 162, 163, 164, 165, 167, 174, 185, 186, 189, 192, 235, 271 ஆகியப் பதினைந்து பாடல்களில் புலவர்கள் இறைச்சியை கையாண்டு இருப்பதைக் காணமுடிகிறது. சான்றாகா : 186 - ஆம் பாடலில் **இறைச்சி** அமைந்துள்ள முறை வருமாறு ;

***"கல்லூற்று ஈண்டல் கயன் அறவாங்கி***
***இரும்பிணர்த் தடக்கை நீட்டி -***
***.................................... நீர் கொண்டு" (நற்.186,ப.233)***

**யானை (கருப்பொருள்)**

↓

ஆண் யானை ஊற்றுநீரை மொண்டு கொண்டு பெண் களிரை நோக்குதல்

(கருப்பொருள் கருத்து)

↓

பொருள் கிடைத்ததும் தலைவன் தலைவியை நோக்கி விரைதல் (கருப்பொருள்

உணர்த்தும் குறிப்புப் பொருள்)

↓

யானை போன்று தன் வருத்தத்தைப் பொருட்படுத்தாமல் (பிறருக்கென முயலும் பேரருள் நெஞ்சம் உடையவன் தலைவன், விரைவில் வருவான் (குறிப்புப் பொருள் வாயிலாகத் தெரியவரும் கருத்து). மேற்கண்ட நிலைகள் போன்றே பிற பாடல்களிலும் விலங்குகள், தாவரங்கள் வழி இறைச்சிப் பொருளைப் புலவர்கள் வெளிப்படுத்துவதன் வாயிலாக அவர்களுடைய படைப்பாற்றல் ஆளுமையை அறிந்து கொள்ள முடிகிறது.

**"ஆளுமை என்பது சொந்த உணர்ச்சிகளைப் புலப்படுத்துவது என்ற போக்குடையது அன்று, தன் ஆளுமையை முற்றாகச் சரண் ஆக்குதலாகும்"( இலக்கிய மரபும் தனித் திறமையும்,ப.55)** இக்கருத்தினை உள்வாங்கிக் கொண்டு, நற்றிணைப் பாடல்களை ஆராயும்போது தலைவன், தலைவி, தோழி, தாய் போன்ற மாந்தர்களின் ஆற்றாமை வெளிப்பாடுகளில் உணர்ச்சி செறிந்த நடை காணப்பெற்றாலும் புலவர்கள் தங்கள் ஆளுமையைச் சரண்ஆக்கி, அதனைக் கதைமாந்தர் வழியாக வெளிப்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை**

புலவர் பெயர் தெரியாத நற்றிணைப் பாடல்களில் புலவர்கள், கருத்துக்களை வெளிப்படுத்துவதில் பாரம்பரியம் சார்ந்தவர்களாகவும், பரந்த கண்ணோட்டம் உடையவர்களாகவும் திகழ்கின்றனர். விருப்பு வெறுப்பற்ற ஆளுமைப் பண்பினை வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர். ஆய்வுக்கு உட்படுத்திய பாடல்களது புலவர்களின் நோக்கம் ஒன்றாக இருந்தாலும் அவற்றை வெளிப்படுத்துவதில் தங்களுக்கே உரிய தனிப்பட்ட ஆளுமைப் பண்பினை உடையவர்களாகத் திகழ்கின்றனர். புலவர்கள் பொருளமைப்பதிலே ஒன்றுபட்டாலும் அவற்றை வெளிப்படுத்தும் போது உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி போன்ற உத்தி முறைகளை பயன்படுத்தி தங்களுக்கே உரிய தனிப்பட்ட புலமையை வெளிப்படுதியுள்ளதைக் காணமுடிகிறது.களவு வாழ்வு நீட்டித்தலை விரும்பாமை, இளமையிற் சிறந்த வளமை இல்லை என்பதை வலியுறுத்தல், மாந்தர்களின் வாழ்வியல் கூறுகளை உளவியல் வழியே அணுகுதல், களவு வாழ்வு அறத்தோடு பட்ட கற்பு வாழ்வாக மாறுவதை விரும்புதல். பரத்தமை ஒழுக்கத்தால் ஏற்படும் இன்னல்களைத் தெளிவுப்படுத்தல் ஆகிய ஆளுமைத் தன்மை உடையவராக, புலவர் பெயர் தெரியாப் பாடல்களைப் படைத்த புலவர்கள் திகழ்வதைக் காணமுடிகிறது. நுண்ணிய மனித உணர்வுகளை, இயற்கையின் நுண் அமைப்புக்களோடு இயைபுறச் செய்வதிலும் தத்தம் தனிப் பண்பினைப் புலப்படுத்துவதிலும் புலவர்களிடம் பண்மையில் ஒருமையைக் காணமுடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. இரவி,கெ,.பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி, நிலாசூரியன் பதிப்பகம்,சென்னை-24,முதற்பதிப்பு - 2017.
2. இளம்பூரணர்(உ.ஆ), திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, மறுபதிப்பு- 2010.
3. இராசகோபாலன்இரா.ச.,*மரபும் தனித்திறனும்*, அண்ணாநகர், திருப்பத்தூர் - 4, முதற்பதிப்பு- 1969.
4. நடராசன் தி.சு.,*கவிதையெனும் மொழி*, சித்திரை நிலவு - புத்தக வெளியீட்டாளர், மதுரை - 1, முதற்பதிப்பு- 2002.
5. நாராயணசாமி ஐயர், அ., *நற்றிணை நானூறு*, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 18, முதற்பதிப்பு- 2001.

*References*


1. Ravi, K., Pathupattuniyil Aalumai Valarchi, Nilasuriyan Pathipagam, Chennai - 24, First Edition - 2017.

2. Ilampooranar (Urraiasiriyar), Thirunelveli Thenindiya Saiva Siddthantha Nurpathippu kalagam, Chennai - 18, Marupathippu - 2010.

3. Rajagopalan, R.S., Marabum Thanithiranum, Anna Nagar, Tirupattur - 4, First Edition - 1969.

4. Natarajan, T.S., Kaavithaiennum Mozhi, Chithirai Nilavu - Book Paathipagam, Madurai - 1, First Edition - 2002.

5. Narayanasamy Iyer, A., Natrinai Naanuru, Saiva Siddhanta Paathipu Kazhagam, Chennai - 18, First Edition - 2001.

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com